செ.வெ.எண்:33 நாள்:27.04.2021

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள்**
**கொரோனா பாதிக்கப்பட்ட நபர்களை நேரடியாக சந்தித்து விரையில் குணமடைய வாழ்த்துக்களை தெரிவித்தார்.**

---

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் இன்று (27.04.2021) கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக, கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போர்கால அடிப்படையில் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, படுக்கை வசதிகளை அதிகப்படுத்தல், பொதுமக்கள் முககவசம்/கையுறை அணிதல் மற்றும் கைக்கழுவுதல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தல், கொரோனா பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் விதமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல், மாநில/மாவட்ட எல்லைகளில் வரும் வாகனங்கள் ஆய்வுக்கு பின் அனுமதித்தல், இரவு ஊரடங்கில் தங்குதடையின்றி பயணம் மேற்கொள்ளும் விதமாக இரவு 10.00 மணிக்கு முன்பு பேருந்து வசதிகள் போன்ற பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்களில் ஒன்றான பர்கூர் வட்டத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 300 படுக்கை வசதிகள் கொண்ட **கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் பாதுகாப்பு கவச உடை அணிந்து** அனுமதிக்கப்பட்டுள்ள 125 கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை, உணவு மற்றும அடிப்படை வசதிகள் வழங்குவது குறித்து கேட்டறிந்தார்.

**மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்கள் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.**

இந்நிகழ்வில் மாவட்ட தொற்றா நோய் திட்ட அலுவலர் மரு.நா.திருலோகன், மருத்துவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.